**நில அளவை சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நில அளவை சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தய-ாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்கள் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவு | தகவல் உத்தியோகத்தரால் கூடிய விரைவில் மற்றும் கோரிக்கை கிடைத்து 14 நாட்களுக்குள் உரிய தீர்மானம், கோரிக்கை விடுத்த பிரஜைக்கு உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த 03 தகவல் கோரிக்கைகளுக்கும், 2023 ஆம் ஆண்டில் கிடைத்த 06 தகவல் கோரிக்கைகளுக்கும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பதவியணியினர் போதியளவில் இல்லாதிருந்தமையினால் அது தொடர்பாக அறிக்கையினை வைத்துக்கொள்ளாமையினால் இத் தவறுகள் ஏற்பட்டிருந்தது. | தகவல் கோரிக்கைகள் கிடைத்த திகதியில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் உரிய தீர்மானம் மற்றும் கோரிக்கையிட்ட பிரஜைக்கு உடனடியாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2024 ஆம் ஆண்டில் கிடைத்த 14 தகவல் கோரிக்கைகளில் 02 இற்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் பதிலளிக்கப்பட்ட 12 கோரிக்கைகளுக்கிடையே 05 கோரிக்கைகளுக்காக 14 நாட்களை விஞ்சி 05 நாட்கள் முதல் 307 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | அதை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பு கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் PED/01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் பொது முயற்சிகளின் நல்லாளுகைக் காக விநியோகிக்கப்பட்ட கைநூலின் 2.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக உபாயவழித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டிற்காக உபாயவழித் திட்டம் தயாரிக்கப்பட வில்லை. | உபாயவழித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2002 ஒக்டோபர் 04 ஆம் திகதிய 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டம் | | | |
| (i) | 32(1)ஆம் பிரிவு | சபையினால் நியமிக்கப்படுகின்ற செயலாளர் ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிதி நிலைமையின் அடிப்படையில் நிரந்தர செயலாளர் ஒருவரைச் சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | செயலாளர் தாமதமின்றி நியமிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 37(எ) பிரிவு | நில அளவைப் பணியில் ஈடுபட்டுள்ள நபர்களின் கல்வி, பயிற்சி, அங்கீகாரம் போன்ற விடயங்களில் சமத்துவம் மற்றும் பரஸ்பரத்தை நிலைநாட்டுவதற்காக வெளிநாடுகளில் உள்ள அதிகாரத் தரப்பினருடன் பரஸ்பர வேலைத் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் செயற்படுத்ததல் போன்ற பணிகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை. | இது உள்நாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடையதாகும் . குறித்துரைத்த வெளி நாட்டு நிறுவனங்கள் இனங்காணப்படாமை யினால் அந்த விடயங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. | காணி அளவிடல், கல்வி மற்றும் பயிற்சிகளுக்கா க வெளிநாடுகளு டன் பரஸ்பர அல்லது புரிந்துணர்வு வேலைத்திட்டங் களுக்காக இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 39(3) ஆம் பிரிவு | நில அளவையாளராகப் பதிவு செய்வதற்கான கோரிக்கை குறித்துரைத்த மாதிரிப் படிவத்துடன் குறித்துரைத்த கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் பதிவு செய்வதற்காக பணம் செலுத்துதல் மற்றும் விண்ணப்பம் சமர்ப்பித்தல் போன்ற பணிகள் தொடர்பாக உரிய ஒழுங்கு விதியொன்று காணப்படாமையினால் பணம் செலுத்துவதற்கு முன் பதிவு இலக்கம் விநியோகிக்கப் பட்டிருந்தது. அவ்வாறே பதிவிலக்கம் விநியோகிக்கப்பட்ட பின்னர் பணம் செலுத்துவதற்கான தாமதமான காலம் 14 நாட்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சினைக் கொண்டிருந்தது. மீண்டும் பதிவுச் சான்றிதழ் பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த நிலுவைப் பணத்தை அறவிடப்படுகின்றமையால் அந்த நிலுவைப் பணம் அறவிடுவதற்காக இவ்வாறு கணிசமான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | ‘‘அரசாங்கத்தின் நில அளவையாளர்களின் பதிவுக் கட்டணம் அறவிடப்படாமல் பதிவு செய்வதற்கும், அவர்களுக்கு பதிவு இலக்கம் மாத்திரம் வழங்கி சான்றிதழ் பத்திரம் காணி அளவிடல் சபையின் பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கும் அவர்கள் திணைக்கள சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் போது உரிய பணத்தை அறவிட்டு சான்றிதழ் பத்திரம் விநியோகிப் பதற்கும்’’ காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2009.10.23 ஆந் திகதிய எல்டீ/2/2/1/44 ஆம் இலகக் கடித மூலம் குறித்துரைத்த பிரகாரம் காணி அளவிடல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. | பதிவு செய்வதற்கு முன் கட்டணத்தை அறவிட்டு இலக்கம் விநியோகிக்கப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,175,011 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,130,667 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 955,656 குறைவு அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு நிலையான வைப்பு வட்டி மற்றும் பதிவுக் கட்டண வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகிதாசார பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் நடைமுறைச் சொத்து விகிதம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது முறையே 0.47:1 மற்றும் 0.23:1 உம், விரைவுச் சொத்து விகிதம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது முறையே 0.44:1 மற்றும் 0.21:1 உம் ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற நில அளவையாளர்களின் தொழில் தகைமை பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளை விசாரணை செய்ய வேண்டி இருந்த போதிலும் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு வழங்கப்படாத 134 முறைப்பாடுகளும், 2023 ஆம் ஆண்டிற்காக கிடைத்த 78 முறைகளுடன் மொத்த முறைப்பாடுகள் 212 ஆக இருந்ததுடன் அந்த முறைப்பாடுகளில் 63 இற்கு தீர்வு வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளைத் தீர்த்துவைக்கும் வீதம் 30 சதவீதமாகும். 2024 இல் கிடைத்த 56 முறைப்பாடுகளுடன் மொத்த முறைப்பாடுகள் 205 ஆக இருந்ததுடன் அதில் 42 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளைத் தீர்க்கும் வீதம் 20 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம் முறைகளை விசாரணை செய்யும் வீதம் 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | மாதந்தோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யு முடியுமாக இருந்த போதிலும் அதனை விட மாதந்தோறும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்ததன் காரணமாக இவ்வாறு ஏற்பட்டிருந்தது. 2024 இன் குழு அங்கத்தவர்கள் நியமிக்காமையின் காரணமாக 08 முறைப்பாட்டுக் விசாணைக் குழு மாத்திரம் நடத்தப்பட்டுள்ளது. | முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்குப் பொருத்தமான உள்ளக வேலைத் திட்டமொன்று பின்பற்றப்படல் வேண்டும். |